விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம், ஜெயங்கொண்டான் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: ஊராட்சி மன்ற தலைவர் திரு.**லட்சுமிசுப்ரமணியம்**

நாள்:- 01-07-2024

பொருள்: உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம், ஜெயங்கொண்டான் ஊராட்சி, ஜெயங்கொண்டான் கிராமம், சர்வே: 2/2B1, 2/2B2, 2/3B1, 2/3B2, 2/5B, 2/6D1A கலந்தாற்போல் உள்ள ஏக்கர் 2.00 செண்டிற்கு (அ) 8086 ச.மீ., பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள **வெற்றி நகர்** புதிய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு விழுப்புரம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஊராட்சிமன்ற தீர்மானம் இயற்றி இறுதி ஒப்புதல் வழங்குதல் சார்பாக.

பார்வை: 1) மனுதாரர்:- திரு.K.அப்துல் நாசர் செஞ்சி, அவர்களின் விண்ணப்பம் நாள்: 27-06-2024.

2) அரசாணை எண்: 79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 04-05-2017.

3) மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம். அவர்களின் கடிதம் இணையதள வாயிலாக ROC No: V2DCGN1V/2024 நாள்: 08-06-2024 மற்றும் ம.வ./ந.ஊ.உ.இ.(வி.மா) எண்:122/2024 (இணையதள ஒப்புதல்).

4) அரசாணை எண்: 141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 23-09-2020.

5) சார்பதிவாளர், பதிவுத்துறை, சார்பதிவாளர் அலுவலகம், செஞ்சி, ஆவண எண்கள்: 2367/2017 நாள்: 31-10-2017 & 400/2021 நாள்: 15-02-2021.

6) கூராய்வு கட்டணம் செலுத்திய ரசீது இந்தியன் வங்கி-செஞ்சி ஜெயங்கொண்டான் ஊரட்சிமன்ற கணக்கு எண்: 7392908810 நாள்: 03-07-2024.

7) அரசாணை எண்: 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை நாள்: 09-12-2020.

8) ஊராட்சி மன்ற தீர்மாண எண்: 14 நாள்: 04-07-2024.

உத்தரவு:

பார்வை (3) ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க செஞ்சி ஊராட்சி ஒன்றியம் ஜெயங்கொண்டான் ஊராட்சி ஒன்றிம், ஜெயங்கொண்டான் கிராமம் - சர்வே: 2/2B1, 2/2B2, 2/3B1, 2/3B2, 2/5B, 2/6D1A கலந்தாற்போல் உள்ள ஏக்கர் 2.00 செண்டிற்கு (அ) 8086 ச.மீ., பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள **வெற்றி நகர்** குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அளிக்கும் பொருட்டு கட்டமைப்பு வரைபடங்கள் இவ்வலுவலகம் வரப்பெற்றுள்ளது.

மேலும் திரு.K.அப்துல் நாசர் என்கிற மனுதாரர் மனைப்பிரிவில் உள்ள சாலைகள் உள்ள இடங்களை முழுமையாக ஊராட்சி மன்ற தலைவர், ஜெயங்கொண்டான் ஊராட்சி மன்றம் அவர்களுக்கு ஆவண எண்: 1947/2024 நாள்: 28-05-2024 அன்று தானப்பத்திரம் அளிக்கப்பட்டது. பார்வை (4) ல் காணும் அரசானையின் வழிகாட்டுதலின் அடிப்படையிலும் பார்வை (8) ல் காணும் ஊரட்சி மன்றத்தின் தீர்மானத்தின்படியும் ஒப்புதல் பெறப்பட்டு பின்வரும் விபரப்படி கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

செலுத்தப்பட்ட கட்டண விபரம்:-

மனைகளுக்கு கூராய்வு கட்டணமாக ரூ.52,000/- ஜெயங்கொண்டான் ஊரட்சி மன்றம் இந்தியன் வங்கி-செஞ்சி கணக்கு எண்: 7392908810 நாள்: 03-07-2024. மற்றும் சந்தை மதிப்பில் 3 சதவீதம் நிலம் பயன்மாற்று கட்டணமாக ரூ.6,18,840/- நாள்: 31-05-2024. அரசு தலைப்பில் கணக்கு எண்: 4607077093218, Challan No: 2024053126002 செலுத்தப்பட்டுள்ளது.

1.	மனைப்பிரிவின் மொத்த பரப்பு	: ஏக்கர் 2.00 செண்ட் (அ) 8086 ச.மீ.,
2.	மொத்த மனைகள்	: 52 மனைகள்
3.	சாலைகள் மற்றும் மூலைமுடக்குகள்	: 2419.75 ச.மீ.,

9) இந்த மனைப்பிரிவிற்கு உத்தரவு ஜெயங்கொண்டான் ஊராட்சி திரு.K.அப்துல் நாசர் என்ற மனுதாரரால் அமைக்கபட்டுள்ள சர்வே: 2/2B1, 2/2B2, 2/3B1, 2/3B2, 2/5B, 2/6D1A கலந்தாற்போல் உள்ள ஏக்கர் 2.00 செண்டிற்கு (அ) 8086 ச.மீ., பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள **வெற்றி நகர்** புதிய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மட்டுமே பொருந்தும் பார்வை (4) ல் காணும் அரசாணையின்படி மனுதாரரால் மனைப்பிரிவில் உள்ள சாலைகள் உள்ள இடங்களை முழுமையாக ஜெயங்கொண்டான் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களுக்கு ஆவண எண்: 1947/2024 நாள்: 28-05-2024 அன்று ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

10) நில உரிம குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகளின்படி அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றம் செய்யக்கூடாது. மேற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவிற்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

தலைவர்
திரு. ஜோசப் அன்பரசன்,
ஜெயங்கொண்டான் ஊராட்சி
ஊராட்சி மன்ற அலுவலர்,
செஞ்சி ஒன்றியம்

ஜெயங்கொண்டான் ஊராட்சி மன்றம்,
செஞ்சி ஊராட்சி ஒன்றிம்,
செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

பெறுநர்:

திரு.K.அப்துல் நாசர்
நெ.2/76, சத்திர தெரு,
சக்கராபுரம், செஞ்சி, விழுப்புரம் மாவட்டம்.

1. உதவி இயக்குநர்,
   நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம்,
   விழுப்புரம் மண்டலம், விழுப்புரம்.
2. சார்பதிவாளர், செஞ்சி சார்பதிவாளர் அலுவலகம்,
   செஞ்சி.
3. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),
   விழுப்புரம் - அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
4. வட்டார வளர்ச்சி அலுவலர் (கீ.ஊ),
   செஞ்சி ஊராட்சி ஒன்றியம்.
5. மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்-2,
   ஊராட்சி ஒன்றியம், செஞ்சி.
6. ஊராட்சி மன்ற அலுவலக கோப்பிற்கு.
   ஜெயங்கொண்டான்.